ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
தொலைபேசி : 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் |
| திகதி | 2020.08.21 |

## மத்திய வங்கி 4 சதவீதம் கொண்ட தொழிற்படு மூலதனக் கடன் திட்டத்தின் இறுதித் திகதியினை 2020 செத்தெம்பர் 30ஆம் நாள்வரை நீடித்திருக்கிறது

நாணயச் சபை 2020 ஓகத்து 19ஆம் நாள் நடைபெற்ற அதன் கூட்டத்தில் 4 சதவீதம் கொண்ட தொழிற்படு மூலதனக் கடன் திட்டத்தின் இறுதித் திகதியினை நீடிப்பதற்கு தீர்மானித்திருக்கிறது. இதற்கமைய, கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களும் தனிப்பட்டவர்களும் சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதியின் கீழான தமது கடன் விண்ணப்பங்களை தொடர்பான உரிமம்பெற்ற வங்கிகளுக்கு 2020 செத்தெம்பர் 30ஆம் நாள்வரை சமர்ப்பிக்கமுடியும்.

அதேவேளை, மேற்குறிப்பிட்ட வசதியின் கீழ் 36,489 விண்ணப்பதாரிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட கடன்களுக்கு ரூ.100,017 மில்லியன் பெறுமதியான தொகைக்கு ஒப்புதலளித்ததன் மூலம் 2020 ஓகத்து 18ஆம் நாளன்று இலங்கை மத்திய வங்கியின் கடன் தொகை ரூ.100 பில்லியன் கடன் தொகைகள் மைல்கல்லினைக் கடந்தது. ஒப்புதலளிக்கப்பட்ட கடன்களில் 2020 ஓகத்து 18ஆம் நாள் உள்ளவாறு, நாடளாவிய ரீதியில் பாதிக்கப்பட்ட 25,365 வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கிடையே ரூ.68.5 பில்லியனுக்கும் கூடுதலான தொகையினை உரிமம்பெற்ற வங்கிகள் ஏற்கனவே பகிர்ந்தளித்திருக்கின்றன. (விபரங்களுக்கு அட்டவணை 1இனைப் பார்க்கவும்).

இத்திட்டத்தின்கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட ரூ.100 பில்லியனில் 50 சதவீதம் வர்த்தக பணிகளை முக்கியமாகக் கொண்ட பணிகள் துறையிலுள்ள வியாபாரங்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற வேளையில், முறையே 34 சதவீதமும் 16 சதவீதமும் கைத்தொழில் துறை மற்றும் வேளாண்மைத் துறைகளிலுள்ள வியாபாரங்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கின்றன.

இலங்கை அரசாங்கத்தின் ஆலோசனையுடன் இலங்கை மத்திய வங்கி கொவிட்-19 தொற்றினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட சுயவேலைவாய்ப்பு மற்றும் தனிப்பட்டவர்கள் உள்ளடங்கலாக வியாபாரங்களுக்கு 6 மாத சலுகைக் காலத்தினை உள்ளடக்கிய 24 மாத மீள்கொடுப்பனவுக் காலத்துடன் ஆண்டொன்றிற்கு 4 சதவீதம் கொண்ட வட்டி வீதத்தில்

மூன்று கட்டங்களில் தொழிற்படு மூலதனக் கடன்களை வழங்குவதற்கு வசதியளிக்கின்ற விதத்தில் சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் கடன் திட்டத்தினை அறிமுகப்படுத்தியது.

"சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி" கடன் திட்டம்
2020.08.18இல் உள்ளவாறான முன்னேற்றம்

| பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் | இலங்கை மத்திய வங்கியினால் பதிவுசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் | | உரிமம்பெற்ற வங்கிகளினால் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் கடன்கள் | |
|---|---|---|---|---|
| | **எண்ணிக்கை** | **பெறுமதி (ரூ.மில்.)** | **எண்ணிக்கை** | **பெறுமதி (ரூ.மில்.)** |
| இலங்கை வங்கி | 9,182 | 21,215 | 6,389 | 14,726 |
| கொமர்ஷல் பாங்க் | 4,149 | 18,443 | 3,801 | 16,281 |
| ஹட்டன் நஷனல் பாங்க் | 2,965 | 11,980 | 1,796 | 7,120 |
| மக்கள் வங்கி | 7,057 | 11,335 | 4,860 | 6,399 |
| செலான் வங்கி | 1,993 | 8,796 | 952 | 4,051 |
| நஷனல் டெவலப்மன்ட் பாங்க் | 1,225 | 7,976 | 871 | 5,234 |
| சம்பத் வங்கி | 1,938 | 6,930 | 1,679 | 5,890 |
| டிஎவ்சிசி பாங்க் | 985 | 4,130 | 722 | 2,518 |
| பிரதேச அபிவிருத்தி வங்கி | 5,194 | 2,977 | 3,059 | 1,472 |
| நேஷன் ரஸ்ட் பாங்க் | 180 | 1,402 | 172 | 1,328 |
| சனச டெவலெப்மன்ட் பாங்க் | 1,004 | 1,218 | 599 | 617 |
| பான் ஏசியா பாங்கிங் கோப்பரேசன் | 264 | 849 | 193 | 600 |
| யுனியன் பாங்க் | 125 | 772 | 86 | 581 |
| அமானா வங்கி | 70 | 640 | 66 | 589 |
| கொங்கொங் அன்ட் சங்காய் பாங்கிங் கோப்பரேசன் | 17 | 363 | 17 | 363 |
| டொயிஷ் பாங்க் | 6 | 140 | 6 | 140 |
| இந்தியன் பாங்க் | 14 | 137 | 13 | 136 |
| எம்சிபீ பாங்க் | 9 | 116 | 7 | 106 |
| கார்கில்ஸ் பாங்க் | 10 | 94 | 7 | 72 |
| அரச ஈட்டு முதலீட்டு வங்கி | 28 | 93 | 26 | 93 |
| சிற்றி பாங்க் | 4 | 88 | 4 | 88 |
| ஸ்டேட் பாங்க் ஒப் இந்தியா | 5 | 79 | 1 | 2 |
| சான்டற் சாட்டற் பாங்க் | 4 | 64 | 4 | 64 |
| பப்பிளிக் பாங்க் பேர்க்காட் | 14 | 58 | 13 | 55 |
| எச்டிஎவ்சி | 40 | 43 | 16 | 18 |
| சிறிலங்கா சேமிப்பு வங்கி | 4 | 28 | 4 | 28 |
| இந்தியன் ஓவசிஸ் பாங்க் | 2 | 27 | 2 | 27 |
| ஹபீப் பாங்க் | 1 | 25 | - | - |
| **மொத்தம்** | **36,489** | **100,017** | **25,365** | **68,597** |